# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2018.09.11 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகம் (திருத்தம்)

***1975 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 40.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** - இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்"எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1975ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகச் சட்டத்தின் விரிவுப்பெயரைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான விரிவுப்பெயரின் சட்டப்பயனானது, மதிப்பாளர்கள் உயர்தொழில் தொடர்பில் பொதுமக்களின் அக்கறைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான ஏற்பாடுகளைச் செய்வதன்மூலம் சட்டத்தின் நோக்கெல்லையை அதிகரிப்பதாகும்.

**வாசகம் 3**- இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, நிறுவகத்தின் உறுப்பினர்களை கூட்டிணைக் கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களாக வகுதிப்படுத்துவதாகும்.

**வாசகம் 4** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது, 21ஆம் வாசகத்தினால் உட்புகுத்தப்பட்ட அட்டவணை 'அ' இல் குறித்துரைக்கப்பட்டவாறாக நிறுவகத்தின் உறுப்பினர்களைத் தரப்படுத்து வதற்கானஏற்பாட்டைச் செய்வதாகும்.

**வாசகம் 5** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, மதிப்பீட்டு நியமங்களைத் தீர்மானித்தல் மற்றும் உயர்தொழில்சார் தகைமைபற்றி மதிப்பீடுசெய்தல் தொடர்பில் நிறுவகத்தின் தத்துவங்களை விசாலித்தலாகும்.

**வாசகம் 6** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவை நீக்கிவிட்டு மாற்றீடுசெய்வதுடன், மாற்றீடுசெய்யப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, தேவையான தகைமைகள் மற்றும் நுழைவுக் கட்டணத்தையும் உறுப்பாண்மைக் கட்டணத்தையும் கொடுப்பனவு செய்தல் தொடர்பில் புதிய ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதாகும்.

**வாசகம் 7** - இவ்வாசகம் 7அ, 7ஆ, 7இ மற்றும் 7ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன், அப் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன் சட்டப்பயனானது, பின்வரும் விடயங்களின் மீதான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதாகும்:-

(அ) உறுப்பாண்மைக் காலப்பகுதி, உறுப்பாண்மையைப் புதுப்பித்தல் மற்றும் புதுப்பித்தற் கட்டணம்;

(ஆ) அமைச்சர், ஒழுங்குவிதிகளின் மூலம், ஒவ்வொருவகையினதுமான உறுப்பாண்மைக்கும் ஏற்புடைத்தான விண்ணப்பக் கட்டணம், நுழைவுக் கட்டணம், உறுப்பாண்மைக் கட்டணம் மற்றும் புதுப்பித்தற் கட்டணம் என்பவற்றை விதித்துரைத்தல்;

(இ) பேரவையின் கௌரவ பொதுச்செயலாளர், கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப் படாத உறுப்பினர்கள் பற்றிய இடாப்புக்களைப் பேணுதல்; அத்துடன்

(ஈ) பேரவை, தேவைப்படுத்தப்பட்டவாறாக தமது தொடர்ச்சியான உயர்தொழில்சார் அபிவிருத்தி பற்றிப் பேரவையைத் திருப்திப்படுத்துவதற்குத் தவறுகின்ற நிறுவக உறுப்பினரொருவரின் உறுப்பாண்மையை இல்லாதொழித்தல் பற்றிய முடிபை எடுத்தல்.

**வாசகம் 8** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஆட்சிஉறுப்பினர், உயர்தொழில்சார் இணையுரிமை உறுப்பினர் மற்றும் உரிமம்பெற்ற உறுப்பினர் தரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வுள்ளஉறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறித்துரைப்பதன் மூலம் பேரவையின் அமைப்பை மாற்றுவதாகும்.

**வாசகம் 9** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பதவியை வறிதாக்குவதாகவும் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவிவறிதாகும் பட்சத்தில் வெற்றிடங்களை நிரப்புகின்ற முறையாகவும் கருதப்படவேண்டிய காரணமொன்றாக "எந்த குறித்தவொரு தரத்திலிருந்து அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ அந்த தரத்தின் உறுப்பாண்மையை இல்லாதொழித்தல்"என்பதைச் சேர்ப்பதாகும்.

**வாசகம் 10** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, கௌரவ பொதுச்செயலாளர், கௌரவ பொது பொருளாளர் அல்லது கௌரவ உதவி பொதுச்செயலாளர் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தேவையானதகைமைகளைத் தரமுயர்த்துவதாகும்.

**வாசகம் 11** - இவ்வாசகம்,முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சட்டத்தின் கோப்பினுள் கூட்டிணைக்கப்பட்டவாறான ஒழுங்குவிதிகள் அமைச்சரினால் எக்கருமங்கள் தொடர்பில் ஆக்கப்படலாமோ அக்கருமங்கள் தொடர்பில் குறித்தசில ஏற்பாடுகளை நீக்குவதாகும்.

**வாசகம் 12** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, நிறுவகத்தின் அமர்வொன்றுக்கான கூட்டநடப் பெண்ணைத் திருத்துவதாகும்.

**வாசகம் 13** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறானஅப்பிரிவின் சட்டப்பயனானது, நிறுவகத்தின் மாநாடொன்றுக்கான கூட்டநடப்பெண்ணைத் திருத்துவதும் அத்துடன் அத்தகையமாநாட்டின் அலுவல்களின் வகைகளைக் குறித்துரைப்பதுமாகும்.

**வாசகம் 14** - இவ்வாசகம்,முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, நிறுவகத்தின் விசேட பொதுக்கூட்டமொன்று எந்தச் சந்தர்ப்பங்களில் கூட்டப்படலாமோ அந்தச் சந்தர்ப்பங்களைக் குறித்துரைப்பதாகும்.

**வாசகம் 15** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, நிறுவகத்தின் ஏதேனும் சாதாரண கூட்டத்துக்கு வருகைதருவதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களை அழைப்பதற்கு பேரவைக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 16** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பேரவையினால் உறுப்பினர்கள் நிரலிலிருந்து அகற்றப்படுதல் அல்லது இடைநிறுத்தப்படுதலுக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 17** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, நிறுவகத்தின் உறுப்பினர்களினால் மகுடப்பெயர்கள், பதவிப்பெயர்கள் மற்றும் "மதிப்பாளர்" அல்லது "வீஎல்ஆர் (vlr)" என்ற முற்கூறைப் பயன்படுத்துவதன்மீதான ஏற்பாடுகளைத் திருத்துவதாகும்.

***வாசகம் 18*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 17ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 19*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 25அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்து வதுடன், அப்புதிய பிரிவின் சட்டப்பயனானது, நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினரொருவர் அசைவுள்ள ஆதனங்களினதும் அருவச் சொத்துக்களினதும் மதிப்பிடுதலை நிறைவேற்றுவதை அங்கீகரிப்பதாகும்.

***வாசகம் 20*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் பிரிவு 32 என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது, "அமைச்சர்" மற்றும் "பரிந்துகேட்டல்" என்னும் சொல்லமைப்புகளுக்கான பொருள்கோடல்களை அறிமுகப்படுத்துவதாகும்.

***வாசகம் 21*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை 'அ' என்பதை பதிலீடு செய்வதுடன், புதிய அட்டவணை 'அ' இன் சட்டப்பயனானது, நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்டமற்றும் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்கள் பற்றிய தரப்படுத்தலுக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 22*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை 'ஆ' என்பதை பதிலீடு செய்வதுடன், புதிய அட்டவணை 'ஆ' இன் சட்டப்பயனானது, நிறுவக உறுப்பினர்களின் வேறுபட்ட தரங்கள் பற்றிய கட்டளைக்கற்களைக் குறித்துரைப்பதாகும்.

***வாசகம் 23*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான புதிய அட்டவணைகள் 'இ' மற்றும் 'ஈ' என்பவற்றை உட்புகுத்துவதுடன், அவ்வட்டவணைகளின் சட்டப்பயனானது, நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களாக நிரலிற் சேர்க்கப்படுவதற்கான விண்ணப்பங்களைச் செய்வதில் பின்பற்றவேண்டிய நடவடிக்கைமுறையைக் குறித்துரைப்பதும் அத்துடன் முறையே, உயர்தொழில்சார் துர்நடத்தையாக அமைகின்ற செயல்கள் அல்லது செய்யாமைகளை குறித்துரைப்பதுமாகும்.

***வாசகம் 24*** - இவ்வாசகம், அட்டவணை 'அ' இற்கு 21ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு விளைவான நிறுவகத்தின் உறுப்பாண்மை தொடர்பில் நிலைபெயர்கால ஏற்பாடுகளைச்செய்வதாகும்.

***வாசகம் 25*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் செய்யப்பட்ட எந்த நிரலில் சேர்த்தல்களினதும் அத்துடன் இச்சட்டவாக்கம் தொழிற்பாட்டுக்குவந்த பின்னரும்கூட முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் பேணப்பட்ட உறுப்பாண்மை இடாப்புக்களினதும் செல்லுபடி காலப்பகுதி முடிவுறாதுள்ளதோ, அந்த நிரலில் சேர்த்தல்களினதும் உறுப்பாண்மை இடாப்புக்களினதும் பேணல்களை ஏற்பாடுசெய்வதாகும்.

ச.வ.- ஓ. 50/2009

### 1975 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் , 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை மதிப்பாளர்கள் நிறுவக (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1975ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப்பெயரைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1975ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகச் சட்டத்துக்கான விரிவுப்பெயர் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப்பெயர் இடப்படுகின்றது:-

> "இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகமென அறியப்படும் நிறுவகமொன்றையும் மற்றும் அந்த நிறுவகத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும் அந்த நிறுவகத்தினது உறுப்பினர்களின் உயர்தொழில்சார் நியமங்களையும் ஒழுக்காற்றையும் பேணுவதற்கும் பொறுப்பாகவிருக்க வேண்டிய அந்த நிறுவகத்தின் பேரவையொன்றையும் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; மதிப்பாளர்கள் என்ற உயர்தொழில் தொடர்பாகப் பொதுமக்களின் அக்கறைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

> "(2) நிறுவகத்தின் உறுப்பினர்கள், கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"உறுப்பினர்களைத் தரப்படுத்துதல்.

2அ. நிறுவகத்தின் உறுப்பினர்களைத் தரப் படுத்துதலானது இச்சட்டத்துக்கான அட்டவணை 'அ' வில் குறித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஓஓ) கூட்டுத்தாபனம் தோதானவையெனக் கருதக்கூடிய வாறான மதிப்பீட்டு நியமங்களைக் காலத்துக்குக் காலம் தீர்மானித்தல்;

(ஓஓஓ) தொடர்ச்சியான உயர்தொழில்கள் அபிவிருத்திக்காக உயர்தொழில்சார் தகுதியை மதிப்பீடுசெய்வதற்கான திட்டமொன்றை அல்லது வேறேதேனும் தேவைப் பாட்டைத் தீர்மானித்தல்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான விண்ணப்பம்.

7. (1) இச்சட்டத்துக்கான அட்டவணை 'ஆ' வில் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளையும் அனுபவத்தையும் திருப்திப்படுத்துகின்ற எவரேனுமாள், இச்சட்டத்துக்கான அட்டவணை 'இ' இல் ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய படிவத்திலும் முறையிலும் நிறுவகத்தின் உறுப்பாண்மைக்காக விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் உரியமுறையில் விண்ணப்பித்துள்ள எவரேனுமாள், விதித்துரைக்கப்பட்ட நுழைவுக் கட்டணத்தையும் உறுப்பாண்மைக் கட்டணத்தையும் கொடுப்பனவு செய்வதன்மீது நிறுவகத்தின் உறுப்பினரொருவராக நிரலில் சேர்க்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ, 7ஆ, 7இ மற்றும் 7ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இவை அச் சட்டவாக்கத்தின் 7அ, 7ஆ, 7இ மற்றும் 7ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"உறுப்பாண்மைக் காலப் பகுதியும் புதுப்பித்தலும்.

7அ. (1) நிறுவகத்தின் உறுப்பாண்மைக் காலப்பகுதி திசெம்பர் முப்பத்தோராம் நாளன்று முடிவடைகின்ற ஓராண்டாதல் வேண்டுமென்பதுடன், 22 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படற்பாலதாதலும் வேண்டும்.

(2) உறுப்பாண்மையைப் புதுப்பிப்பதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள் உறுப்பாண்மை முடிவுறுவதற்கு முன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல் புதுப்பித்தலுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) உறுப்பாண்மையானது, விதித்துரைக்கப்பட்ட புதுப்பித்தற் கட்டணக் கொடுப்பனவின்மீது புதுப் பிக்கப்படலாம்.

விண்ணப்பக் கட்டணம் முதலியன.

7ஆ. அமைச்சர், ஒழுங்குவிதிகளின் மூலம், எவ்வகையினதுமான உறுப்பாண்மை தொடர்பிலும் செலுத்தப்படற்பாலதான விண்ணப்பக் கட்டணம், நுழைவுக் கட்டணம், உறுப்பாண்மைக் கட்டணம் மற்றும் புதுப்பித்தற் கட்டணம் என்பவற்றை விதித்துரைக்கலாம்.

இடாப்புக்கள்.

7இ. (1) (அ) கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களாக நிரலில் சேர்க்கப்பட்ட ஆட்களுக்கான இடாப்பொன்றும், கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களாக நிரலில் சேர்க்கப்பட்ட ஆட்களுக்கான இடாப்பொன்றும் இருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வோர் இடாப்பும் தனிவேறான பாகங்களாகப் பிரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு பாகமும், இடாப்பானது எந்த உறுப்பினர்களின் வகுப்புத் தொடர்பானதோ அந்த உறுப்பினர்களின் வகுப்பிலுள்ள வெவ்வேறு தரமொன்று தொடர்பிலானதாக இருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தரத்தில் நிரலில் சேர்க்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும், முகவரிகளையும், தகைமைகளையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) இடாப்புக்கள், பேரவைக்காகவும் அதன் சார்பிலும் பேரவையின் கௌரவ பொதுச் செயலாளரினால் பேணப்படுதல் வேண்டும்.

உறுப்பாண்மை இல்லாதொழிதல்.

7ஈ. ஐந்தாம் பிரிவின் (ஓஓஓ) என்னும் பந்தியின் கீழ் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் திட்டத்துக்கு அல்லது தேவைப்பாட்டுக்கு இணங்க தமது தொடர்ச்சியான உயர்தொழில்சார் அபிவிருத்தி பற்றி பேரவையை திருப்திப்படுத்துவதற்குத் தவறுகின்ற நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினர், பேரவையினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து உறுப்பினராக இல்லாதொழிதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ஆ) ஆட்சி உறுப்பினர் தரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்கள், உயர்தொழில்சார் இணையுரிமையுறுப்பினர் தரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள் மற்றும் உரிமம்பெற்ற உறுப்பினர்கள் தரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர்";

(2) அதன் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஊ) தலைவர் பதவியைக் கடைசியாக வகித்த ஆள்;" அத்துடன்

(3) அப்பிரிவிற்கான காப்புவாசகத்தை நீக்கிவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவில்:-

(அ) (உ) என்னும் பந்தியில் "அகற்றப்படுவதன் மேல்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "அகற்றப்படுவதன் மேல்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

(ஊ) குறிப்பிட்ட எந்தத் தரத்திலிருந்து அவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றாரோ அந்த தரத்தின் உறுப்பினரொருவராக இல்லாதொழிவதன்மேல்,"; அத்துடன்

(இ) (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3) இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறப்பின் மூலம், பதவிவிலகுவதன் மூலம் அல்லது வேறுவகையாகப் பதவியை முன்னரே வறிதாக்குமிடத்து, பேரவையானது அதற்கென நடாத்தப்பட்டவொரு கூட்டத்தில், 8(2)(அ) மற்றும் (ஆ) என்னும் பிரிவினதும் 11 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குக் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினரொருவரை நியமிக்கலாம்.";

(2) (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை அதன் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் பந்திகள் (ஆ) மற்றும் (இ) என்பவற்றை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:

"(ஆ) உயர்தொழில்சார் இணையுரிமை உறுப்பினர் தரத்திற்குக் குறையாதவொரு தரத்தில் அவர் நிரலில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தாலன்றி, கௌரவ பொதுச் செயலாளராக, கௌரவப் பொது பொருளாளராக அல்லது கௌரவ உதவி பொதுச் செயலாளராக"; அத்துடன்

(2) (ஈ) என்னும் பந்தியை அதன் (இ) என்னும் பந்தியாக மீள எழுத்திடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஆ), (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) (எ) முதல் (ண) வரையிலான பந்திகளை (ஆ) முதல் (க) வரையிலான பந்திகளாக மீளஎழுத்திடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2) நிறுவகத்தின் அமர்வொன்றுக்கான கூட்டநடப்பெண், அத்தகைய அமர்வில் வாக்களிப்பதற்குத் தகவுடைய நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களில் ஐந்தில் இரண்டு பங்கினராக அல்லது இருநூறாக, இதில் எது குறைவாகவுள்ளதோ அதுவாக இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(4) நிறுவகத்தின் ஏதேனும் மாநாட்டுக்கான கூட்ட நடப்பெண் நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களில் நூற்றியைம்பதாக அல்லது நான்கில் ஒரு பங்கினராக, இதில் எது குறைவாகவுள்ளதோ அதுவாக இருத்தல் வேண்டும்.";

(2) அதன் (4)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(5) மாநாட்டிலான அலுவல்களின் வகைகள், மற்றவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) நடுத்தவணை அறிக்கையை வாசித்தல்;

(ஆ) நடுத்தவணை அறிக்கையை ஏற்றுக்கொள்ளுதல்;

(இ) நடுத்தவணைக் கணக்குகள் பற்றிய கூற்றைப் பட்டியலிடுதல்;

(ஈ) நடுத்தவணைக் கணக்குகள் பற்றிய கூற்றை ஏற்றுக் கொள்ளுதல்;

(உ) பேரவையினால் தீர்மானங்கள் முன்மொழியப்படுதல்;

(ஊ) பேரவையின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளுதல்;

(எ) பேரவையினால் முடிபுசெய்யப்பட்டவாறு மதிப்பிடும் தொழில்புரிதல் தொடர்பான ஏதேனும் தொழினுட்பக் கருமத்தைக் கவனத்திற்கொள்ளுதல்.".

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(1) பேரவையின் தலைவர், அவரது சொந்தப் பிரேரணையின்மீது கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின் விசேட பொதுக்கூட்டமொன்றைக் கூட்டலாம் அல்லது பேரவையின் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோரினால் அல்லது வாக்களிப்பதற்குத் தகவுடைய நிறுவகத்தின் ஐம்பது கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களினால் அதற்கெனச் செய்யப்படும் எழுத்திலான தேவைப்பாட்டின்மீது கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின் விசேட பொதுக் கூட்டமொன்று கூட்டப்படுவதைச் செய்தல் வேண்டும்.".

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவு, அதன் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(4) பேரவையானது, நிறுவகத்தின் ஏதேனும் சாதாரணக் கூட்டத்துக்கு வருகைதருவதற்கு அவசியமென அது கருதக் கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களை அழைக்கலாம்.".

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்;

"(4) இப்பிரிவின் உட்பிரிவு (1)(இ) என்பதன் கீழான விசாரணைக்குட்பட்டுள்ள உறுப்பினரொருவரினால் அளிக்கப்பட்ட ஏதேனும் பதவிவிலகுதலைப் பேரவை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(5) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உயர்தொழில் சார் துர்நடத்தை என்பது, இச்சட்டத்துக்கான அட்டவணை 'ஈ' என்பதில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலாக அல்லது செய்யாமையாக இருத்தல் வேண்டும்.";

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"பேரவையினால் உறுப்பினர்கள் நிரலிலிருந்து அகற்றப்படுதல் அல்லது இடைநிறுத்தப்படுதல்.".

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) நிறுவகத்தின் ஆட்சி உறுப்பினராக நிரலிற் சேர்த்துக்கொள்ளப்பட்ட நிறுவகத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் -

(அ) அவர் ஓர் ஆட்சி உறுப்பினர் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கு அவரது பெயருக்குப்பின்னால் "எவ்.ஐ.வீ." என்ற சுருக்கிய பதவிப்பெயரைப் பயன்படுத்துவதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) "பட்டயம்பெற்ற மதிப்பாளர்" என்ற பட்டத்தைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(2) நிறுவகத்தின் உயர்தொழில்சார் இணையுரிமை உறுப்பினராக நிரலிற்சேர்த்துக்கொள்ளப்பட்ட நிறுவகத்தின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் ஓர்

உயர்தொழில்சார் இணையுரிமை உறுப்பினர் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு அவரது பெயருக்குப்பின்னால் ''ஏ.ஐ.வீ.'' என்ற சுருக்கிய பதவிப்பெயரைப் பயன் படுத்துவதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்;

(3) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்;

(4) அதன் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளை முறையே அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(5) மீள இலக்கமிடப்பட்ட (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(5) உட்பிரிவுகள் (1) மற்றும் (2) என்பவற்றின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், அவரது பெயருக்கு முன்னால் ''மதிப்பாளர்'' என்ற முற்கூறைப் பயன்படுத்துவதற்கும், அதற்காக "வீஎல்ஆர் (Vlr)" என்ற சுருக்கீட்டைப் பயன்படுத்துவதற்கும் உரித்துடைய வராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''23 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''23ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 25அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது அம்முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

''அசைவுள்ள ஆதனங்களையும் அருவச் சொத்துக்களையும் மதிப்பிடுதல்.

25அ. நிறுவகத்தின் எவரேனும் கூட்டிணைக் கப்பட்ட உறுப்பினர், அசைவுள்ள ஆதனங்களினதும் அருவச் சொத்துக்களினதும் மதிப்பிடுதலை நிறைவேற்றலாம்; ஆயின், அவர், அத்தகைய

மதிப்பிடுதலை நிறைவேற்றுவதற்குப் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபுணத்துவத்தை உடையவராகவிருத்தல் வேண்டும்.”.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் *31* ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் *32* ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 32 என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*“பொருள் கோடல்.*

**32.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய:-

“அமைச்சர்” என்பது, நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

“பரிந்துகேட்டல்” என்பது,-

(அ) வாடிக்கையாளர்களைப் பரிந்து கேட்பதற்கு ஏதேனும் தரகுக்காக, கொடுப்பனவுக்காக அல்லது பிரதிபயனுக்காக எவரேனுமாளின் சேவைகளை எம்முறையிலேனும் ஈடுபடுத்துதலை; அல்லது

(ஆ) அவருக்காக வாடிக்கையாளர்களை நியாயமற்றமுறையில் கவருகின்ற நோக்கத்துக்காக எம்முறையிலேனும் விளம்பரப்படுத்துதலை,

உள்ளடக்கும்.”.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை ‘அ’ என்பது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை ‘அ’ என்பதை மாற்றீடு செய்தல்.*

**"அட்டவணை 'அ'**

[பிரிவு 2அ]

நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களைத் தரப்படுத்துதல் பின்வருமாறாகவிருத்தல் வேண்டும்:-

(அ) நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர், ஆட்சி உறுப்பினரொருவராக, உயர்தொழில்சார் இணையுரிமை உறுப்பினரொருவராக அல்லது உரிமம்பெற்ற உறுப்பினரொருவராகத் தரப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நிறுவகத்தின் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர், கௌரவ உறுப்பினரொருவராக அல்லது மாணவ உறுப்பினரொருவராக அல்லது தகுதிகாண்நிலை உறுப்பினரொருவராகத் தரப்படுத்தப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை 'ஆ' என்பதை மாற்றீடு செய்தல்.*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை 'ஆ' என்பது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

**"அட்டவணை 'ஆ'**

[பிரிவு 7]

(1) ஆளொருவர் பின்வருமாறிருப்பின் ஆட்சி உறுப்பினராக நிரலில் சேர்க்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்:-

(அ) உயர்தொழில்சார் இணையுரிமை உறுப்பினர் தரத்தில் ஆகக்குறைந்தது பதினைந்து ஆண்டுகளுக்கு அவர் சேவையாற்றியிருந்து 5 ஆம் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட தொடர்ச்சியான உயர்தொழில்சார் அபிவிருத்திக்காக உயர்தொழில்சார் தகுதியை மதிப்பீடுசெய்வதற்கான திட்டத்துக்கிணங்க அல்லது வேறேதேனும் தேவைப்பாட்டுக்கிணங்க மதிப்பிடுதல் உயர்தொழிலைப் புரிபவராகவிருப்பின்:

ஆயின், இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு பெப்புருவரி மாதம் பதினான்காம் நாளன்று கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களாகவிருந்த உறுப்பினர்கள், மேற்கூறப்பட்டவாறாகத் தொடர்ச்சியான

உயர்தொழில்சார் அபிவிருத்திக்காக உயர் தொழில்சார் தகுதியை மதிப்பீடுசெய்வதற்கான திட்டத்திலிருந்து அல்லது வேறேதேனும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர்; அல்லது

(ஆ) பேரவையின் அபிப்பிராயத்தில், அவரை ஆட்சி உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுதல், உயர்தொழிலின் அக்கறைகளை மேம் படுத்தும் வகையில் அவர் மதிப்பிடுதலில் அத்தகைய அறிவையும் உயர்தொழில் திறமையையும் பெற்றிருப்பின்.

(2) ஆளொருவர் பின்வருமாறிருப்பின் உயர்தொழில்சார் இணையுரிமை உறுப்பினராக நிரலில் சேர்க்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்:-

(அ) அவர், நிறுவகத்தின் இறுதி அல்லது நேரடி இறுதிப் பரீட்சையில் அல்லது லண்டன் பல்கலைக்கழகத்தின் அல்லது ரிடிங் பல்கலைக்கழகத்தின் அல்லது பேரவையினால் ஏற்றங்கீகரிக் கப்பட்ட இலங்கையிலுள்ள ஏதேனும் பல்கலைக்கழகத்தின் தோட்ட முகாமைத்துவத்தில் அறிவியல்மாணிப் பட்டப் பரீட்சையில் தேறி யிருப்பின் அல்லது கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் காணிப் பொருளாதாரத்தில் கலைமாணிப் பட்டப் பரீட்சையில் தேறி யிருப்பின் அல்லது பொதுத் தொழில்புரிகைப் பிரிவில் பட்டயம்பெற்ற நிலஅளவையாளர்கள் றோயல் நிறுவனத்தின் இறுதிப்பரீட்சையில் தேறியிருப்பின் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் மதிப்பிடுதலிலான உயர் தேசிய திப்புளோமாவைப் பெற்றிருப்பின் அல்லது இப்பரீட்சைகளுக்குச் சமமானதெனப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறே தேனும் இயைபான தகைமையைப் பெற்றிருப்பின்; அல்லது

(ஆ) அவர், பேரவையினால் பணிக்கப்பட்டவாறும் பேரவையினால் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறும் கண்காணிக்கப்பட்ட மதிப்பிடும் உயர்தொழிலில் ஆகக்குறைந்தது இரண்டாண்டுகளைக் கொண்ட தகைமைபெற்ற பின்னரான முழுநேர அனுபவத்தையுடைய தகுதிகாண் நிலை உறுப்பினராகவிருப்பின்; அல்லது

(இ) அவர், இரண்டாண்டுகளுக்கான முழுநேர அனுபவத்திற்குச் சமமாகக் கருதப்பட்ட பகுதிநேர ஆகக்குறைந்த எண்ணிக்கை யினவான ஆண்டுகளுக்காக பேரவைக்குப் பணிக்கப்பட்ட வாறாகவும் பேரவையினால் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறாகவும், பேரவையினால் கண்காணிக்கப்பட்ட மதிப்பிடும் உயர்தொழிலில் தகைமை பெற்றபின்னரான அனுபவத்தையுடைய தகுதிகாண்

நிலை உறுப்பினராகவிருப்பதுடன், மேலும், 5 ஆம் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட தொடர்ச்சியான உயர்தொழில்சார் அபிவிருத்திக்காக உயர்தொழில்சார் தகுதியை மதிப்பீடுசெய்வதற்கான திட்டத்துக்கிணங்க அல்லது வேறேதேனும் தேவைப்பாட்டுக்கிணங்க மதிப்பிடுதல் உயர்தொழிலில் இருப்பவராகவிருப்பின்; அல்லது

(ஈ) ஏதேனும் பல்கலைக்கழகத்தில், பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறியொன்றில் மதிப்பிடுதல் என்ற பாடத்தைக் கற்பிப்பதில் ஆகக்குறைந்தது நான்காண்டு முழுநேர அனுபவத்தையுடையவராகவிருப்பின்.

(3) ஆளொருவர் பின்வருமாறிருப்பின் உரிமம்பெற்ற உறுப்பினராக நிரலில் சேர்க்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்:-

(அ) அவர், 30 வயதுக்கு மேற்பட்டவராகவிருப்பின்; அத்துடன்

(ஆ) அவர், 1977 ஆம் ஆண்டு சனவரி மாதம் 3 ஆந்தேதிக்கு முன்னர் ஏழாண்டுகளுக்குக் குறையாமல் மதிப்பாளரொருவராகத் தொழில் புரிந்திருப்பதுடன் பேரவையினால் அளிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழை உடைமையில் வைத்திருத்தல்;

(4) ஆளொருவர் பின்வருமாறிருப்பின் தகுதிகாண்நிலை உறுப்பினராக நிரலில் சேர்க்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்:-

(அ) அவர், இவ்வட்டவணையின் (2) (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறு உயர்தொழில்சார் இணையுரிமை உறுப்பினர் தரத்துக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்ட அல்லது திப்புளோமாக் கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருப்பின்; அத்துடன்

(ஆ) அவர், 5 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட உயர்தொழில்சார் தகுதியின் மதிப்பீட்டுத் திட்டத்துக்கிணங்க அல்லது தொடர்ச்சியான உயர்தொழில்சார் அபிவிருத்திக்கான வேறேதேனும் தேவைப்பாட்டுக்கிணங்க மதிப்பிடுதல் உயர்தொழிலைப் புரிபவராகவிருப்பின்.

ஆளொருவர் தகுதிகாண்நிலை உறுப்பினராக இருக்கக்கூடிய ஆகக்கூடிய காலப்பகுதி பத்தாண்டுகளாதல் வேண்டும்.

(5) ஆளொருவர் பின்வருமாறிருப்பின் மாணவ உறுப்பினராக நிரலிற் சேர்க் கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்:-

(அ) அவர், பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவிருப்பின்; அத்துடன்

(ஆ) அவர், இவ்வட்டவணையின் (2) (அ) என்னும் பந்தியிற் குறித் துரைக்கப்பட்டவாறு உயர்தொழில்சார் இணையுரிமை உறுப்பினர் தரத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட தகைமைகளுக்கு இட்டுச் செல்கின்ற, விடயத்துக்கேற்ப, உள்வாரி அல்லது வெளிவாரி, முழுநேர அல்லது பகுதிநேர பட்ட அல்லது திப்புளோமாக் கற்கைநெறியைப் பின்பற்றுகின்ற மாணவராகப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் பதிவுசெய்யப்பட்டிருப்பின்.

ஆளொருவர் மாணவ உறுப்பினராக இருக்கக்கூடிய ஆகக்கூடிய காலப்பகுதி பத்தாண்டுகளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய அட்டவணைகள் 'இ' மற்றும் 'ஈ' என்பவற்றைச் சேர்த்தல்.*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை 'ஆ' என்பதை உடனடுத்து அதன் அட்டவணை 'இ' மற்றும் அட்டவணை 'ஈ' என்றவாறு பயனுறவேண்டிய பின்வரும் புதிய அட்டவணைகளைச் சேர்ப்பதன்மூலம் அச்சட்டவாக்கம் இத்தாற் றிருத்தப்படுகின்றது:-

**"அட்டவணை 'இ'**

[பிரிவு 7]

(1) கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின் ஏதேனும் தரத்தில் நிரலில் சேர்க்கப்படுவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும்-

(அ) பேரவையின் கௌரவ பொதுச் செயலாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) பேரவையின் கௌரவ பொதுச் செயலாளரினால் அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டும்;

(இ) எந்தத் தகைமைகளின் பயனைக்கொண்டு விண்ணப்ப காரர் அத்தரத்தில் நிரலில் சேர்க்கப்படுவதற்குத் தகவுடைய வராகவுள்ளாரோ அந்தத் தகைமைகளைக் கூறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தகைமைகள் பற்றிய சத்தியக்கடுதாசியொன்றினால் ஆதாரப்படுத் தப்படுதலும் வேண்டும்;

(ஈ) விண்ணப்பகாரரினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்;

(உ) தோதான விண்ணப்பக் கட்டணம், நுழைவுக் கட்டணம் மற்றும் உறுப்பாண்மைக் கட்டணம் என்பவற்றிற்கான தொகையுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) பேரவையின் இரு உறுப்பினர்களினால் அல்லது நிறுவகத்தின் நான்கு உறுப்பினர்களினால் விதந்துரைக் கப்படுதல் வேண்டும்; இவர்களுள் ஒருவர் ஆட்சி உறுப்பினராகவிருத்தலும், ஒருவர் உயர்தொழில்சார் இணையுரிமையுறுப்பினராகவிருத்தலும், இருவருக்குக் குறையாதோர், விண்ணப்பகாரர் எந்தத் தரத்தில் நிரலில் சேர்க்கப்படுவதற்கு நாடுகின்றாரோ அந்தத் தரத்தில் நிரலிற்சேர்க்கப்பட்ட உறுப்பினர்களாகவிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களின் ஏதேனும் தரத்தில் நிரலில் சேர்க்கப்படுவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும்-

(அ) பேரவையினால் அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப் படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) எந்தத் தகைமைகளின் பயனைக்கொண்டு விண்ணப்ப காரர் அத்தரத்தில் நிரலில் சேர்க்கப்படுவதற்குத் தகவு டைய வராகவுள்ளாரோ அந்தத் தகைமைகளைக் கூறுதல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பமானது கௌரவ உறுப்பினர் தரத்திலல்லாத வேறேதேனும் தரத்தில் நிரலில் சேர்க்கப்படுவதற்கானதாகவிருக்குமிடத்து, அத்தகைய தகைமைபற்றிய சத்தியக்கடுதாசியினால் ஆதாரப்படுத்தப்படுதலும் வேண்டும்;

(இ) விண்ணப்பகாரரினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஈ) அத்தகைய விண்ணப்பமானது கௌரவ உறுப்பினர் தரத்திலல்லாது வேறேதேனும் தரத்தில் நிரலில் சேர்க் கப்படுவதற்கானதாகவிருக்குமிடத்து, தோதான விண்ணப் பக் கட்டணம், நுழைவுக் கட்டணம் மற்றும் உறுப் பாண்மைக் கட்டணம் என்பவற்றுடன் சேர்த்தனுப்பப் படுதல் வேண்டும் அல்லது விண்ணப்பமானது கௌரவ உறுப்பினரொருவராக நிரலிற்சேர்க்கப்படுவதற்கான தாகவிருக்குமிடத்து, தோதான உறுப்பாண்மைக் கட்டணத் துடன் சேர்த்தனுப்பப்படுதல்வேண்டும்; அத்துடன்

(உ) ஆகக்குறைந்தது இரு கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர் களினால் விதந்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை 'ஈ'**

[பிரிவு 22]

பின்வரும் செயல்களுள் அல்லது செய்யாமைகளுள் ஒவ்வொன்றும், அதாவது-

(அ) உறுப்பினரொருவரென்ற அவரது அந்தஸ்துக்கு ஏற்கத்தக்கதாக விராதிருக்கின்ற;

(ஆ) மதிப்பிடுதல் உயர்தொழிலை அல்லது நிறுவகத்தை மதிப்புக் குறைக்கின்ற அல்லது மதிப்புக்குறைப்பதற்கு எத்தனிக்கின்ற;

(இ) மதிப்பிடுதல் உயர்தொழிலுக்குப் பங்கம்விளைவிக்கும் ஏதேனும் செயலில் சம்பந்தப்படுகின்ற அல்லது மதிப்பாளர்கள் நிறுவகத்தின் நலனுக்குத் தீங்குவிளைவிக்கின்ற;

(ஈ) வேறேவரெனும் உறுப்பினரின் உயர்தொழில் நற்பெயரை அல்லது தேர்ச்சியை மதிப்புக்குறைக்கின்ற அல்லது மதிப்புக்குறைப்பதற்கு எத்தனிக்கின்ற;

(ஊ) எந்த வாடிக்கையாளரின் அல்லது எதிர்கால வாடிக்கையாளரின் அக்கறைகள், அவரது அல்லது அவரது தொழில் இணையாளர் களுள் எவர்களினதும் அக்கறைகளுடன் முரண்படுகின்றனவோ அல்லது முரண்படக்கூடியனவோ அந்த வாடிக்கையாளருக்காகச் செயலாற்றும்போது அல்லது எதிர்கால வாடிக்கையாளருக்காகச் செயலாற்றுவதற்கு உத்தேசிக்கும்போது, இயைபான நிகழ்வுகளை வாடிக்கையாளருக்கும் அல்லது எதிர்கால வாடிக்கையாளருக்கும் மற்றும் தொழில் இணையாளர்களுக்கும் வெளிவிடாதிருக்கின்ற மற்றும் அத்தகைய வெளிவிடுகை வாய்மொழி மூலமானதாக விருக்கின்றவிடத்து, கிடைக்கக்கூடிய முதலாவது சந்தர்ப்பத்தில் அதனை எழுத்தில் உறுதிப்படுத்தாதிருக்கின்ற அத்துடன் வாடிக்கையாளர் அவரை அவ்வாறு செயலாற்றும்படி அவருக்கு வேண்டுகோள் விடுத்தாலொழிய, தாம் செயலாற்றுவதற்கு அல்லது தொடர்ந்து செயலாற்றுவதற்கு இயலாதவராகவிருப்பாரென வாடிக்கையாளருக்கு அறிவிக்காதிருக்கின்ற;

(ஊ) தாமே நேரடியாக, அல்லது அவர் எந்த மதிப்பிடுதல் உயர்தொழி லான குழுமத்தில் அல்லது கம்பெனியில் பணிப்பாளரொருவராக உள்ளாரோ அந்த ஏதேனும் குழுமம் அல்லது கம்பெனி, முரண்படுகின்ற அக்கறைகளைக் கொண்டுள்ள இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட திறத்தவர்களுக்காக, அத்திறத்தவர்களுள் ஒவ்வொருவருக்கும் இயைபான நிகழ்வுகளை உடனடியாக வெளிவிடாமலும், வெளிவிடுகையொன்று இருப்பின் அத்தகைய வெளிவிடுகையைக் கிடைக்கக்கூடிய முதலாவது சந்தர்ப்பத்தில் எழுத்தில் உறுதிப்படுத்தாமலும், செயலாற்றுவதனை உறுதிப்படுத் துவதற்குத் தவறுகின்ற;

(எ) ஓர் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதனை அனுமதிப்பதற்குப் போதிய தகவலைப் பெறத்தவறுகின்ற;

(ஏ) உயர்தொழிற் சேவைகளுக்காகப் போட்டிவகையிலான கட்டண மொன்றைக் கூறுவதற்குக் கோருதலொன்றைப் பெறாமலும், தேவைப்பட்ட சேவைகளின் தன்மையையும் நோக்கெல்லையையும் மதிப்பீடுசெய்வதற்கு உறுப்பினரை இயலச்செய்வதற்கான போதிய தகவல் இன்றியும் அவ்வாறு செய்கின்ற;

(ஐ) உயர்தொழிற் சேவைகளுக்கான கட்டணமொன்றை ஒருதடவை கூறியபின்னர், அதே சேவைக்காக வேறோர் உறுப்பினரினால் கூறப்பட்ட கட்டணத்தைக் கணக்குக்கெடுத்து அவ்விலைகூறலை மீளாய்வுசெய்கின்ற;

(ஒ) வேறோர் உறுப்பினரினால் கூறப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட கட்டணத்தைக் குறிப்பீடுசெய்து கணக்கிடப்படவேண்டிய உயர் தொழிற் சேவைகளுக்கான கட்டணமொன்றைக் கூறுகின்ற;

(ஓ) மதிப்பாளர் ஏதேனும் பதவியை அல்லது நியமனத்தை வகிப்பதன் காரணமாக அவருக்குத் தடுமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது உறுப்பினரொருவருக்கும் அவரது வாடிக்கையாளருக்கும் இடையே நம்பிக்கையிழப்பு ஏற்படுமிடத்து ஏதேனும் உயர்தொழிற் கருமத்தை ஏற்கின்ற;

(ஔ) உறுப்பினர் எந்த வாடிக்கையாளர்சார்பில் செயலாற்றாதொழிகின்றாரோ அந்த வாடிக்கையாளருக்கு நியாயமான அறிவித்தல் கொடுக்காதிருக்கின்ற:

ஆயின், உறுப்பினரொருவர் தமது வாடிக்கையாளருக்காகச் செயலாற்றாதொழியும்படி வேண்டுகோள் விடுக்கப்படுவதன்மேல் அல்லது உறுப்பினருக்கு ஏதேனும் உயர்தொழிற் கருமத்தில் அல்லது நடவடிக்கையில் அவரது வாடிக்கையாளரின் அதிகாரமெதுவும் இராதிருக்கும் சூழ்நிலைகளில் வாடிக்கையாளர் மேலதிக அறிவுறுத்துதல்களை விடுப்பதற்கு மறுக்குமிடத்து அல்லது அசட்டையாகவிருக்குமிடத்து, அவ்வாறு செயலாற்றா தொழிதல் உயர்தொழில்சார் துர்நடத்தையாதலாகாது;

(க) ஏதேனும் உயர்தொழில் பணியைப் புரிகையில் அவரினாற் பெறப்படும் தனிப்பட்ட அல்லது அந்தரங்கத் தகவலை, அப்பணி அவருக்கு எவ்வாளினால் பொறுப்பிக்கப்பட்டுள்ளதோ அவ்வாளினால் அல்லது அவரது முகவரினால் அல்லது ஒரு சட்ட நீதிமன்றத்தினால் அல்லது இச்சட்டத்தினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு சபையினால் அல்லது நடுத்தீர்ப்பினால் அவ்வாறு செய்யும்படி தேவைப் படுத்தப்பட்டபோதுதவிர வெளிவிடுகின்ற:

ஆயின், அத்தகைய தனிப்பட்ட அல்லது அந்தரங்கத் தகவலை வெளிவிடுவதனைத் தவிர்ப்பதற்கு உறுப்பினரின்பாலான இக்கடமை, வாடிக்கையாளருடன் அவரது உயர்தொழில்சார் தொடர்பு உள்ளபோது மட்டுமல்லாமல், சொல்லப்பட்ட உறுப்பினர் சொல்லப்பட்ட வாடிக்கையாளருக்காகச் செயலாற்றாதொழிந்துள்ள பின்னருங்கூட மற்றும் வாடிக்கையாளர் இறந்தபின்னருங்கூட, அதற்குப்பின்னர் திட்டவட்டமற்ற காலத்துக்கானதாகவிருக்கும்;

(ங) தாமாக அல்லது வேறொருவர் மூலமாக, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், வேலையைப் பரிந்துகேட்கும் செயல்முறையைப் பின்பற்றுகின்ற;

(ச) உறுப்பினரொருவரினாலான பின்வருவனவற்றைக் கொண்டுள்ள ஏதேனும் விளம்பரத்தை, எழுதுகருவிவகையை, அட்டையை அல்லது அறிவித்தலைப் பயன்படுத்துகின்ற:-

(அ) நிகழ்வுபற்றிய செம்மையற்றவொரு கூற்று;

(ஆ) அறிவுறுத்துதல்களின் வெளிப்படையானவொரு பரிந்து கேட்டல்;

(இ) உறுப்பினரினால் முனையப்பட்ட சேவைகளுக்கும் வேறு உறுப்பினர்களினால் அல்லது குழுமங்களினால் முனையப்பட்ட சேவைகளுக்கும் இடையே தெளிவானவோர் ஒப்பிடுகை;

(ஈ) மதிப்பிடுதல் உயர்தொழிலில் குறிப்பிட்ட ஏதேனும் அம்சத்தில் "விசேடித்துவம்பெற்றவராக" அல்லது "நிபுணராக" இருந்துள்ளாரென உறுப்பினரொருவரினாலான அல்லது அவரது குழுமத்தினாலானவோர் உரிமைக்கோரிக்கை;

(ஞ) மதிப்பிடுதல் அறிக்கைகளையும் மதிப்பிடுதல் தொடர்பான கருமங்கள்மீதான மதியுரையையும் வழங்குதல்போன்ற எவையேனும் உயர்தொழில்சார் பணிகளை அவர் புரியும்போது, அவர் நிறுவகத்தில் எந்தப் பெயரினால் பதிவுசெய்யப்பட்டுள்ளாரோ அந்தப் பெயரிலிருந்து வித்தியாசப்படும் வேறேதேனும் பெயர் அல்லது பதவிப்பெயர், நிறுவகத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டாலொழிய, அத்தகைய வேறுபெயரில் அல்லது பதவிப்பெயரில் தம்மை அடையாளங்காட்டுகின்ற;

(ட) தமது உயர்தொழில்சார் பணியைப் புரிகையில் பாரிய அசட்டையை வெளிக்காட்டுகின்ற;

(ண) வாடிக்கையாளருக்கு மதிப்பிடுதல் மீதான பிழையான அபிப்பிராயமொன்றை அறிந்துகொண்டு, அசட்டையாக அல்லது மோசடியாகத் தெரிவிக்கின்ற;

(த) பேரவை ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமின்றி, 5 ஆம் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட எவையேனும் மதிப்பிடுதல் நியமங்களி லிருந்து விலகுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற;

(ந) உறுப்பாண்மை இலச்சினையுடன் அல்லது நிறுவகத்தினால் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வேறேதேனும் வகையினதான அடையாளத்துடன் கையாடுகின்ற

செயல்களுள் அல்லது செய்யாமைகளுள் ஒவ்வொன்றும் மதிப்பாளர்பாலான உயர்தொழில்சார் துர்நடத்தையாக அமைதல் வேண்டும்.".

**24.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று பட்டதாரி உறுப்பினர் மற்றும் இணையுரிமை உறுப்பினர் தரங்களிலுள்ள எல்லா ஆட்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் உயர்தொழில்சார் இணையுரிமைத் தரத்துக்குச் சேர்க்கப்பட்டு நிரலிற் சேர்க்கப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்: நிலைபெயர்கால ஏற்பாடுகள்.

ஆயின் எவ்வாறாயினும், உயர்தொழில்சார் இணையுரிமை உறுப்பினர் தரத்தில் உறுப்பாண்மைக் காலப்பகுதியைக் கணிப்பீடுசெய்யும் நோக்கத்துக்காக, பட்டதாரித் தரத்தில் முழு உறுப்பாண்மைக் காலப்பகுதியும், இணையுரிமைத் தரத்தில் உறுப்பாண்மைக் காலப்பகுதியின் மூன்றிலிரெண்டும் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற நிறுவகத்தின் பேரவை, இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கப் புதிய பேரவையொன்று தேர்ந்தெடுக்கப்படும்வரை தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆறு மாத காலப் பகுதியினுள் அந்நோக்கத்துக்காகக் கூட்டப்பட்ட கூட்டிணைக்கப் பட்ட உறுப்பினர்களின் விசேட பொதுக் கூட்டத்தில் புதிய பேரவை தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(இ) மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட ஆறு மாத காலப்பகுதியினுள் நடாத்தப்படுவதற்கு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற நிறுவகத்தின் பேரவையினால் நிறுவகத் தின் அமர்வொன்று நிர்ணயிக்கப்பட்டிருப்பின், அத்தகைய அமர்வு நிர்ணயிக்கப்பட்டவாறு நடாத்தப்படுதலாகாது.

(ஈ) இரண்டாம் உட்பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட விசேட பொதுக் கூட்டம், 18 ஆம் பிரிவின் நோக்கத்துக்காக நிறுவகத்தின் அமர்வொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

பேணல்கள்.

**25.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் நிரலிற்சேர்த்தலின் செல்லுபடிக் காலப்பகுதியானது, இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறாதுள்ளவிடத்து, அத்தகைய நிரலிற்சேர்த்தலானது, எல்லா நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட நிரலில் சேர்த்தலாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ் பேணப்பட்ட ஏதேனும் இடாப்பு, இச்சட்டத்தினால் உட்புகுத்தப்பட்டவாறான 7இ என்னும் பிரிவின் கீழ் பேணப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**26.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.